நவம்பர் – 08

TNPSC துளிகள்

- அமெரிக்காவைச் சேர்ந்த கிளவுட் உள்கட்டமைப்பு நிறுவனமான Vultr, AMD Instinct MI355X கிராபிக்ஸ்/வரைகலை செயலாக்க அலகுகளால் (GPUs) இயக்கப்படும் 20 மெகாவாட் (MW) செயற்கை நுண்ணறிவு (AI) சூப்பர் கிளஸ்டரை/தொகுதிகளை சென்னையில் அறிமுகப்படுத்தியது.
- இந்திய விமானப்படையின் 29-வது தலைமை தளபதியாக பொறுப்பேற்ற ஏர் மார்ஷல் அசுதோஷ் தீட்சித்துக்குப் பிறகு, ஏர் மார்ஷல் இந்தர்பால் சிங் வாலியா இந்திய விமானப்படையின் துணைத் தளபதியாக (VCAS) பொறுப்பேற்றார்.
- டேராடூனைச் சேர்ந்த தொழில்நுட்பக் கல்வியாளர் பிரசாந்த் சவுத்ரி, ஊரக வளர்ச்சிக்கான சிறந்த பங்களிப்பிற்கான ஐந்தாவது ரோகிணி நய்யார் விருதை வென்றார்.
- இந்திய புவியியல் ஆய்வு மையத்தின் (GSI) 55-வது தலைமை இயக்குநராக திரு தினேஷ் விட்டல்ராவ் கன்வீர் பொறுப்பேற்றார்.
- சண்டிகர் காவல்துறை தனது 60 ஆண்டு கால சேவையைக் குறிக்கும் வகையில், 2026 ஆம் ஆண்டு நவம்பர் 1 அன்று நடைபெற்ற வைர விழா கொண்டாட்டங்களின் போது குடியரசுத் தலைவரின் வண்ண விருதைப் (President's Colour) பெற்றது.
- சுனாமி ஆயத்த நிலை மற்றும் அபாயக் குறைப்பை ஊக்குவிப்பதற்காக ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 5 அன்று உலக சுனாமி விழிப்புணர்வு தினம் அனுசரிக்கப்படுகிறது.
    - 2026 ஆம் ஆண்டிற்கான கருத்துரு Be Tsunami Ready: Resilience Starts with You என்பதாகும்.


தமிழ்நாட்டுச் செய்திகள்

தமிழ்நாடு தனிக் கொடி கோரிக்கை

- தமிழ்நாடு தினக் கொண்டாட்டங்களின் போது மாநில பொதுப்பணித்துறை அமைச்சர் கேள்வி எழுப்பியதை அடுத்து, 2026 ஆம் ஆண்டு நவம்பர் 1 அன்று தமிழ்நாட்டுக்கு தனி கொடி வேண்டும் என்ற கோரிக்கை மீண்டும் எழுந்தது.
- 1970 ஆம் ஆண்டில், முன்னாள் முதலமைச்சர் மு. கருணாநிதி, எந்த அரசியல் கட்சி சின்னமும் இல்லாமல், கோயில் கோபுரம் மற்றும் தேசியக் கொடியின் வண்ணங்களைக் கொண்ட தனி மாநிலக் கொடியைக் கோரி பிரதமர் இந்திரா காந்திக்கு கடிதம் எழுதினார்.
- 1975 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில், தமிழ்நாட்டின் இந்த முன்மொழிவை மத்திய அரசு நிராகரித்தது, இந்தக் கோரிக்கையை தொடர்ந்து முன்னெடுப்பதாக கருணாநிதி பின்னர் மாநில சட்டமன்றத்தில் தெரிவித்தார்.
- 2017 ஆம் ஆண்டில், சித்தராமையா தலைமையிலான கர்நாடக அரசு தனி மாநிலக் கொடிக்கான சாத்தியக்கூறுகளை ஆராய ஒரு நிபுணர் குழுவை அமைத்தது.
- 2018 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில், கர்நாடகா தனது முன்மொழியப்பட்ட 'நத த்வஜா'வை (Nada Dhwaja) வெளியிட்டது, இது நடுவில் மாநில சின்னத்துடன் சிவப்பு, வெள்ளை மற்றும் மஞ்சள் வண்ணங்களைக் கொண்டிருந்தது.
- முன்மொழியப்பட்ட கர்நாடக கொடி தேசியக் கொடிக்கு கீழே பறக்கவிடப்பட வேண்டும் என்று நோக்கம் கொண்டிருந்தது; 2020 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில்,

கர்நாடக ராஜ்யோத்சவா கொண்டாட்டங்களின் போது இரண்டு கொடிகளும் ஏற்றப்பட்டன.

- இந்திய உள்துறை அமைச்சகத்தின் (MHA) கூற்றுப்படி, இந்திய அரசியலமைப்புச் சட்டம் மாநிலங்களுக்கெனத் தனித்தனி கொடிகள் இருப்பதையோ அல்லது அவை இருக்கக்கூடாது என்பதையோ குறிப்பாகக் குறிப்பிடவில்லை.
- சரத்து 51A(a) தேசியக் கொடி மற்றும் தேசிய கீதத்தை மதிப்பது ஒவ்வொரு குடிமகனின் அடிப்படை கடமையாக்குகிறது.
- தேசியக் கொடியானது இந்தியக் கொடிச் சட்டம், 2002 மற்றும் தேசியச் சின்னங்கள் அவமதிப்புத் தடுப்புச் சட்டம், 1971 ஆகியவற்றால் நிர்வகிக்கப்படுகிறது.



உச்ச நீதிமன்றத்தின் பிராந்திய அமர்வுகள்



- சென்னையில் உச்ச நீதிமன்ற அமர்வை நிறுவக் கோரி தமிழ்நாடு முதலமைச்சர் பிரதமருக்கு கடிதம் எழுதினார்.
- தென் மாநிலங்களைச் சேர்ந்த வழக்குரைஞர்கள் புதுடெல்லிக்குச் செல்வதில் உள்ள சிரமங்களைக் சுட்டிக்காட்டி, 1980 ஆம் ஆண்டில் தமிழ்நாடு முதன்முதலில் சென்னையில் உச்ச நீதிமன்ற அமர்வை முன்மொழிந்தது.
- இந்திய அரசியலமைப்பின் 130-வது சரத்தானது, உச்ச நீதிமன்றம் டெல்லியில் அல்லது இந்தியக் குடியரசுத் தலைவரின் ஒப்புதலுடன் இந்தியத் தலைமை நீதிபதியால் (CJI) முடிவு செய்யப்படும் பிற இடங்களில் அமரலாம் என்று கூறுகிறது.
- சரத்து 32 ஆனது அடிப்படை உரிமைகளைச் செயல்படுத்துவதற்காக உச்ச நீதிமன்றத்தை அணுகும் உரிமையை வழங்குகிறது.
- 2007 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 7 அன்று, உச்ச நீதிமன்றத்தின் முழு அமர்வு, பிராந்திய


அமர்வுகளை நிறுவுவது குறித்த அதன் முந்தைய முடிவை மாற்றுவதற்கு எந்த நியாயமும் இல்லை என்று கண்டறிந்தது.

- 2016 ஆம் ஆண்டு ஜூலை 13 அன்று, வி. வசந்தகுமார் மற்றும் எச்.சி. பாட்டியா இடையிலான வழக்கில் இந்த விவகாரம் ஐந்து நீதிபதிகள் கொண்ட அரசியலமைப்பு அமர்வுக்கு மாற்றப்பட்டது.
- முன்மொழியப்பட்ட சென்னை அமர்வு, தென் மாநிலங்களைச் சேர்ந்த வழக்குரைஞர்களுக்கான நீதி அணுகலை மேம்படுத்துவதையும் பயணச் செலவுகளைக் குறைப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

தேசியச் செய்திகள்

VB–G RAM G குறைதீர்ப்பு விதிகள் 2026


- ஊரக வளர்ச்சி அமைச்சகம் VB–G RAM G சட்டம், 2025 இன் கீழ், VB–G RAM G (விக்சித் பாரத்-ரோஸ்கர் மற்றும் அஜீவிகா திட்டதிற்கான உத்தரவாதம் (கிராமின்)) குறைதீர்ப்பு விதிகள், 2026 ஐ அறிவித்துள்ளது.
- இந்த விதிகள் விசாரணைகளை 7 வேலை நாட்களுக்குள் முடிக்கவும், குறைகளை 15 நாட்களுக்குள் தீர்க்கவும் கோருகின்றன.
- கிராம ஊராட்சி, வட்டாரம் மற்றும் மாவட்ட அளவில் மூன்றடுக்கு குறைதீர்ப்பு அமைப்பு செயல்படும்.
- புகார்கள் டிஜிட்டல் முறையில் பதிவு செய்யப்பட்டு கண்காணிக்கப்பட வேண்டும், 15 நாட்களுக்குப் பிறகும் தீர்க்கப்படாமல் இருந்தால் தானாகவே அடுத்த நிலைக்கு கொண்டு செல்லப்படும்.
- புதிய விதிகள், சந்தேகத்திற்குரிய நிதி முறைகேடுகள் நடந்தால் கட்டாயமாக முதல் தகவல் அறிக்கை (FIR) பதிவு செய்ய வேண்டும் என்பது உள்ளிட்ட சில முந்தைய மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்ட (MGNREGA) விதிகளையும் தவிர்க்கின்றன.



வயோ சம்மான் ராஷ்ட்ரிய அபியான் பிரச்சாரம் 2026


- மூத்த குடிமக்கள் மற்றும் இளைஞர்களுக்கிடையேயான பிணைப்பை வலுப்படுத்தும் வகையில் சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம் 2026 ஆம் ஆண்டு நவம்பர் 4 அன்று வயோ சம்மான் ராஷ்ட்ரிய அபியான் என்ற பிரச்சாரத்தை தொடங்கியது.

- தலைமுறைகளுக்கிடையே மரியாதை, தோழமை மற்றும் பகிரப்பட்ட பொறுப்பை மேம்படுத்துவதற்காக அடல் வயோ அப்யுதய் யோஜனா (AVYAY) திட்டத்தின் கீழ் இந்த பிரச்சாரம் செயல்படுத்தப்படுகிறது.
- இது இணைத்தல் (Connect), உரையாடுதல் (Converse), இணைந்து உருவாக்குதல் (Co-create), பங்களித்தல் (Contribute) மற்றும் தொடருதல் (Continue) ஆகிய 5C கட்டமைப்பைப் பின்பற்றுகிறது.
- 18 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட குடிமக்கள் வயோ சாத்தி (Vayo SAATHI) தன்னார்வலர் இயக்கத்தில் SCW SAMAVESH இணையதளம் அல்லது ஜீவன் (JEEVAN) செயலி மூலம் பதிவு செய்யலாம்.
- இது டிஜிட்டல் கல்வியறிவு, சுகாதார விழிப்புணர்வு, தோழமை மற்றும் தலைமுறைகளுக்கிடையேயான திறன் பகிர்வு உள்ளிட்ட 12 கருத்துருப் பகுதிகளை உள்ளடக்கியது.



சர்வதேசச் செய்திகள்

அமெரிக்க இடைக்காலத் தேர்தல்கள் 2026



- 2026 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் நடைபெற்ற அமெரிக்க இடைக்காலத் தேர்தல்களில், அமெரிக்க செனட் மற்றும் மாநில ஆளுநர் பதவிகளுக்கான தேர்தல்களில் பல வேட்பாளர்கள் வரலாறு படைத்தனர்.

- ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த கெய்ஷா லான்ஸ் பாட்டம்ஸ், ஜார்ஜியாவின் முதல் கறுப்பினப் பெண் மற்றும் முதல் பெண் ஆளுநரானார்.
- ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த அப்துல் எல்-சயீத் அமெரிக்க செனட் சபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் முஸ்லீம் ஆனார்.
- ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த கிறிஸ் பாப்பாஸ் அமெரிக்க செனட் சபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஓரினச்சேர்க்கையாளர் ஆவார்.
- பெக்கி ஃபிளானகன் அமெரிக்க செனட் சபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பூர்வீக அமெரிக்கப் பெண்மணி ஆனார்.
- டெப் ஹாலண்ட், நியூ மெக்சிகோ மாகாணத்தில் அமெரிக்க ஆளுநராக தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பூர்வீக அமெரிக்கப் பெண்மணி ஆனார்.

சுற்றுச்சூழல் செய்திகள்

வங்காள நரி மற்றும் பொன்னிறக் குள்ளநரி பாதுகாப்புத் திட்டம்

- வங்காள நரிகள் மற்றும் பொன்னிறக் குள்ளநரிகளைப் பாதுகாப்பதற்காக தமிழ்நாடு அரசு 2026 ஆம் ஆண்டில் ₹1.3 கோடியை அனுமதித்துள்ளது.
- இந்திய வங்காள நரி (வல்பஸ் பெங்கலென்சிஸ்) மற்றும் பொன்னிறக் குள்ளநரி (கேனிஸ் ஆரியஸ்) ஆகியவை வேட்டையாடுபவைகளாகவும் பின்னந்திண்ணி விலங்குகளாகவும் செயல்பட்டு சுற்றுச்சூழல் சமநிலையை பராமரிக்க உதவுகின்றன.
- இரு உயிரினங்களும் IUCN செம்பட்டியலின் கீழ் தீவாய்ப்பு கவலை குறைந்த இனம் (Least Concern - LC) என வகைப்படுத்தப்பட்டுள்ளன.
- இரண்டும் வனவிலங்கு (பாதுகாப்பு) சட்டம், 1972 இன் அட்டவணை I-இன் கீழ் பட்டியலிடப்பட்டுள்ளன.
- வனவிலங்கு பாதுகாப்பிற்கான மேம்பட்ட நிறுவனத்தின் (AIWC) ஆரம்பநிலை ஆய்வில், தமிழ்நாட்டில் கடந்த 3-4 தசாப்தங்களில் இவற்றின் மக்கள் தொகை மற்றும் பரவல் வரம்புகள் குறைந்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.



மாநிலச் செய்திகள்

பீகார் வண்டல் மேலாண்மைக் கொள்கை 2026

- 2026 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் விரிவான வண்டல் மேலாண்மைக் கொள்கையை அறிமுகப்படுத்திய முதல் இந்திய மாநிலமாக பீகார் உருவெடுத்து

உள்ளது.

- ❖ வெள்ளத்தைக் குறைப்பதற்கும் நதிகளை மீட்டெடுப்பதற்கும் பீகார் நீர் ஆதார மறுசீரமைப்பு மற்றும் வண்டல் மேலாண்மைக் கொள்கை 2026 ஆனது 2026 ஆம் ஆண்டு செப்டம்பர் 15 அன்று அங்கீகரிக்கப்பட்டது.
- ❖ நீரோட்டம் மற்றும் நதியின் கொள்ளளவை மேம்படுத்துவதற்காக கங்கை, கோசி, பாக்மதி, கம்லா-பாலன் மற்றும் கண்டகி போன்ற நதிகள் மீது இது கவனம் செலுத்துகிறது.
- ❖ தேசிய நெடுஞ்சாலைக் கட்டுமானம் மற்றும் பிற உள்கட்டமைப்பு திட்டங்களில் மீட்டெடுக்கப் பட்ட வண்டல், மணல் மற்றும் படிவுகளை மீண்டும் பயன்படுத்துவதை இக்கொள்கை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ நெடுஞ்சாலைத் திட்டங்களில் நதிகளில் இருந்து மீட்கப்பட்ட பொருட்களைப் பயன்படுத்த பீகாருடன் இணைந்து செயல்படுவதற்கான திட்டங்களை சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகம் அறிவித்துள்ளது.
- ❖ நீர் வாழ்விடங்கள் மற்றும் நதி சுற்றுச்சூழல் அமைப்புகளைப் பாதுகாக்க கவனமாக தூர்வாரும் பணி தேவைப்படும் அதே வேளையில், நீர்நிலைகளை மீட்டெடுப்பதற்கும் இந்தக் கொள்கை ஆதரவளிக்கிறது.



★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★